# NSW HEALTH

## COVID-19 Key Points – Friday 8 October 2021

- தடுப்பூசியின் விகிதத்தைப் பொறுத்தவரை, ஒரு மருந்தளவைப் பெறுவதில் 89%-ஐயும், இரண்டு மருந்தளவுகளையும் பெற்றுக்கொள்வதில் 70%-க்கும் அதிகமான விகிதத்தையும், நியூ சவுத் வேல்ஸ் தற்போது எட்டியுள்ளது. 12-15 வயதிற்குட்பட்டவர்களில் சுமார் 63% பேர், தமது முதலாவது தடுப்பூசி மருந்தளவைப் பெற்றுள்ளனர்.
- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணி நேரத்தில், 646 பேர் உள்ளூர் கோவிட்-19 நோய்த்தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர். கவலைக்கிடமாக, 11 பேர் உயிரிழந்துள்ளனர்.
- பரிசோதனையைச் செய்துகொள்வதில் தொடர்ந்தும் அதிக விகிதத்தைப் நாம் பார்ப்பது மிகவும் முக்கியமாகும். மிக இலேசான நோயறிகுறிகள் இருந்தாலும்கூட, பரிசோதனையைச் செய்துகொள்ளத் தயவுசெய்து தொடர்ந்தும் முன் வாருங்கள். நியூ சவுத் வேல்ஸ் முழுவதும், 500-க்கும் மேற்பட்ட கோவிட்-19 பரிசோதனை இடங்கள் உள்ளன.
- தென்மேற்கு மற்றும் மேற்கு சிட்னியில் குறைந்த எண்ணிக்கையிலான நோய்த்தொற்றாளர்களைக் காண்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கும் அதே வேளை, கிரீனேக்கர் (Greenacre), யகூனா (Yagoona), பனனியா (Panania), லகெம்பா (Lakemba), பிளாக்டவுன் (Blacktown), லிவர்பூல் (Liverpool) மற்றும் மெரிலாண்ட்ஸ் (Merrylands) ஆகிய இடங்களில் நோய்த்தொற்றுப் பரவுவதை நாங்கள் இன்னும் காண்கிறோம். ஹண்டர் நியூ இங்கிலண்ட் (Hunter New England) பகுதியிலும் நோய்த்தொற்றாளர்கள் அதிகரித்து வருவதை நாங்கள் பார்க்கிறோம். தயவுசெய்து தொடர்ந்தும் விழிப்புடன் இருங்கள்.
- பிராந்தியங்களில் நாம் காணும் அதிகரிப்புகள், மாநிலம் முழுவதும் எங்கள் தடுப்பூசி விநியோக விகிதங்களை அதிகரிக்கவேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன.
- வீ வா (Wee Waa), குய்ரிண்டி (Quirindi) மற்றும் ப்ரூவர்ரினா (Brewarrina) ஆகிய இடங்களில், கழிவுநீரில் நோய்க்கிருமி நேர்மறையாகக் கண்டறியப்பட்டுள்ளது குறித்தும் நாங்கள் கவலைகொண்டுள்ளோம். நோயறிகுறிகள் ஆரம்பமாவதைத் தயவுசெய்து கண்காணிக்கவும்.
- மற்றைய கட்டுப்பாடுகள் இன்னும் நடைமுறையில் உள்ளன என்பதைத் தயவுசெய்து கவனிக்கவும்: தேவையான இடங்களில் உங்கள் முகக்கவசத்தை அணிவதைத் தொடரவும், உடல் ரீதியான இடைவெளியைப் பேணவும், தேவைப்படும்போது உள்நுழைவுப் பதிவை (check in) மேற்கொள்ளவும், அத்துடன் உங்களுக்கு ஏதேனும் நோயறிகுறிகள் இருந்தால், வெளியே சமூகத்தில் பிரவேசிக்க வேண்டாம். உங்கள் பகுதியில் உள்ள கட்டுப்பாடுகளை அறிந்துவைத்திருப்பதைத் தயவுசெய்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்: https://www.nsw.gov.au/covid-19/rules
- உங்களையும், உங்கள் அன்புக்குரியவர்களையும், அத்துடன் இந்தப் பரந்த சமூகத்தையும் பாதுகாக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றி. 90%-க்கும் மேற்பட்ட இரட்டைத் தடுப்பூசி மருந்தளவு விகிதத்தை அடையும் நோக்கை நாம் கொண்டுள்ளோம், மேலும் இந்த இலக்கை எங்களால் அடைய முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.